# உன்னைத் தப்புவித்தேன்

**நெருக்கத்திலே நீ கூப்பிட்டாய் நான் உன்னைத் தப்புவித்தேன்.**

**இடிமுழக்கம் உண்டாகும் மறைவிடத்திலிருந்து, உனக்கு உத்திரவு அருளினேன். சங் 81 : 7**

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரனே, சகோதரியே,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கடந்த வருடத்தில் நீங்கள் நெருக்கத்திலே கூப்பிட்ட நேரத்திலெல்லாம் உங்களைத் தப்புவித்தார். இடிமுழக்கம் உண்டாகும் மறைவிடத்திலிருந்து உங்களுக்கு உத்திரவு அருளினார். இந்த அன்பை நினைத்து கர்த்தரைத் துதியுங்கள்.

**சங்கீதம் 103 : 1 - 2 :** என் ஆத்துமாவே கர்த்தரைத் ஸ்தோத்தரி, என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி, என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி, அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே – என்பதாகும். ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும், ஏதாவது ஒரு சூழ்நிலையிலும் நெருக்கம் ஏற்படுகிறது. இந்த நெருக்கம் ஏற்படும் பொழுது யாராவது ஒருவர் மேல் நம்முடைய கோபம் எழும்புகிறது. என்னுடைய நெருக்கத்திற்கு காரணம் இவனே அல்லது இவளே என்று நம் மனம் குற்றம் சாட்டுகிறது. உண்மை தான்.

ஆனாலும் அன்பு சகோதரனே, சகோதரியே,

நெருக்கத்திற்கு காரணம் யார் என்று கண்டுபிடித்து, அவர்களை நொந்து கொள்வதைக்காட்டிலும், இந்த நெருக்கத்திலிருந்து உன்னை விடுவிப்பவரை நீ நோக்கிக் கூப்பிட்டால் எத்தனை இன்பமாக இருக்கும்.

**பக்தன் பாடுகிறான்,**

அவரை நோக்கி கூப்பிடும் வேளை, அறிவிப்பாரே அற்புதங்கள்.

எனக்கெட்டாத அறிந்திடலாகா, எத்தனையோ பதிலளித்தார்.

தேவ கிருபை எங்கும் பெருக, தேவனை ஸ்தோத்தரிப்போம்.

பாவ இருள் அகல ஒளி அடைந்தோம் .... என்பதாக.

மிகுந்த வாஞ்சையுடனும், விருப்பத்துடனும் இந்த செய்தியை படிக்கிற சகோதரனே, சகோதரியே,

இந்த வருட கடைசியிலும் இந்த வாக்குத்தத்தை நீங்கள் நினைத்து கர்த்தரை ஸ்தோத்தரிக்கப் போகிறீர்கள். கர்த்தர் சொல்லுகிறார்,

**நெருக்கத்திலே நீ கூப்பிட்டாய், நான் உன்னை தப்புவிப்பேன்**

கடந்த வருடம் முழுவதும், நெருக்கத்திலே நான் கூப்பிட்டேனே எனக்கு பதில் இல்லையே என அங்கலாய்க்கிற சகோதரனே, சகோதரியே சேனைகளின் கர்த்தர் சொல்கிறார்.

**நான் உன்னைத் தப்புவித்தேன் –** என்பதாக.

பயம்வேண்டாம் இனி, கர்த்தர் துணையாய் உண்டே புவியாத்திரை கடந்திடுவோம். உங்களுக்கு அங்காலாய்ப்பு, நெருக்கங்கள் ஏற்படுகிற சமயமெல்லாம் விசுவாசத்துடன் கர்த்தரின் வசனத்தையே அறிக்கையிடுங்கள்.

**நான் உன்னைத் தப்புவித்தேன் –** என்பதாக.

**உங்கள் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.**

**நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது.**

கீழ்க்கண்ட வசனங்களை தினந்தோறும் விசுவாசத்துடன் அறிக்கையிடுங்கள்.

**II கொரி 4 : 8 - 9** நாங்கள் எப்பக்கத்தில் நெருக்கப்பட்டும், ஒடுங்கிப்போவதில்லை. கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை, துன்பபபடுத்தப்பட்டும் கைவிடப்படுவதில்லை. கீழே தள்ளப்பட்டும் மடிந்துபோவதில்லை.

**II கொரி 12 : 10 பவுல் கூறுகிறார்** .. கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்.

**யோனா கூறுகிறார்** .. என் நெருக்கத்திலே நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன். அவர் எனக்கு உத்திரவு அருளினார்

**எரேமியா 15 : 11 கர்த்தர் சொல்கிறார்** .. தீங்கின் காலத்திலும், நெருக்கத்தின் காலத்திலும் உனக்காக நான் சத்துருவுக்கு எதிர்ப்பட்டு, உனக்கு சகாயஞ் செய்வேன் – என்பதாக.

**சங்கீதம் 9 : 9 சங்கீதக்காரன் சொல்கிறான்** .. சிறுமைப்பட்டவனுக்கு கர்த்தர் அடைக்கலமானவர். ‘‘நெருக்கப்படுகிற காலங்களில் அவரே தஞ்சமானவர்’’ என்பதாக.

நெருக்கப்படுகிற சகோதரனே, சகோதரியே, உன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து,

**‘‘ அவர் உம்மையும் நெருக்கத்தினின்று விலக்கி**
**ஒடுக்கமில்லாத விசாலத்திலே வைப்பார்.**
**உம்முடைய போஜன பந்தி கொழுமையான**
**பதார்த்தங்களால் நிறைந்திருக்கும். யோபு 36 : 16**